
# திராவிடத்தால் வாழ்கிறோம்

995

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# திராவிட மாடல் அரசு

நீரை.மகேந்திரன்

143

# பூநாரை பறவைகள் சரணாலயம்!

## வலசைப் பறவைகளுக்கு அரசின் கருணை!







`முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்' என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு நமது முதலமைச்சர் செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி...

காடுகளின் ஆதாரமான யானைகள் மற்றும் புலிகள் போன்ற வன உயிரினங்களைப் பாதுகாப்பதில் தமிழ்நாடு குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் கண்டுள்ளதை இந்திய அளவிலான புள்ளிவிவரங்கள் சொல்கின்றன.

மற்றொருபுறம், அதிகம் அறியப்படாத அருகி வரக்கூடிய உயிரினங்களை 'தமிழ்நாடு அருகிவரும் உயிரினங்கள் நிதியத்தின்' மூலம் பாதுகாப்பான உயிர்க்கோளச் சூழலுக்குள் கொண்டு வரவும் திராவிட மாடல் அரசு பல திட்டங்களைத் தீட்டி வருகிறது. அந்த வரிசையில் தமிழ்நாடு அரசு தொடங்கியுள்ள திட்டம்தான் 'பெரும் பூநாரை பறவைகள் சரணாலயம்'. ராமநாதபுரம் மாவட்டம், ராமேஸ்வரம் - தனுஷ்கோடி பகுதியில் திறந்து வைக்கப்பட்டுள்ள இந்த சரணாலயம் தமிழ்நாட்டில் முதல் பூநாரை பறவைகள் சரணாலயம் எனப் பெருமை பெற்றுள்ளது.

ஃபிளமிங்கோ பறவை எனப்படும் பூநாரை உள்ளிட்ட வலசைப் பறவைகள் இடம்பெயர்வதற்கான மத்திய ஆசிய பறக்கும் பாதையின் முக்கியப் பகுதியாகக் கருதப்படுகிறது, ராமேஸ்வரம் தனுஷ்கோடி பகுதி. இந்தப் பகுதியை பூநாரை உள்ளிட்ட வலசைப் பறவைகள் சரணாலயமாக அறிவிக்க வேண்டும் என சூழலியல் ஆர்வலர்கள் நீண்ட நாட்களாகக் கோரிக்கை விடுத்து வந்தனர்.

### நிதிநிலை அறிக்கையில் அறிவிப்பு!

2025-ஆம் ஆண்டு சட்டமன்றத்தில் தாக்கல் செய்த நிதிநிலை அறிக்கையில், சுற்றுச்சூழல் சார்ந்த பல அறிவிப்புகளை வெளியிட்டது அரசு. குறிப்பாக, பல்லுயிர் பெருக்கத்தை உறுதிசெய்யும் வகையில் வேட்டைப் பறவைகளின் வாழிடங்களைப் பாதுகாக்க 'வேட்டைப் பறவைகள் ஆராய்ச்சி அமைப்பு' ரூ.1 கோடியில் உருவாக்கப்படும் என்கிற அறிவிப்பும், திருவண்ணாமலை மாவட்டம் மேல்செங்கம் பகுதியில் வனச் சுற்றுச்சூழல் அமைப்பை மீட்கும் வகையில், 1,000 ஹெக்டேர் பரப்பில் ரூ.10 கோடியில் பல்லுயிர் பூங்கா நிறுவப்படும் என்கிற அறிவிப்பும் நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

அதையடுத்து, அதற்கான திட்டங்களைத் தீட்டிய அரசு, 05.06.2025 அன்று சென்னை நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில் 'சுற்றுச்சூழல் காலநிலை மற்றும் வனத்துறை'யின் சார்பில் நடைபெற்ற உலகச் சுற்றுச்சூழல் தினவிழாவில் பெரும் பூநாரை சரணாலயத்தைத் தொடங்கிவைத்தார், திராவிட மாடல் நாயகர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்.

இந்த விழாவில், தனுஷ்கோடியில் அமைக்கப்பட்டுள்ள பெரும் பூநாரை பறவைகள் சரணாலயத்தின் (Greater Flamingo Bird Sanctuary) தேவை மற்றும் சிறப்புகளைப் பேசும் குறும்படத்தினையும் முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டார்.

கடலோரங்கள், உப்பளங்கள் மற்றும் ஆழம் குறைந்த குளங்கள், ஏரிகளில் சிறு அல்லது பெரிய குழுக்களாக இரைதேடும். தனுஷ்கோடி கடல் பகுதிக்கு ஆண்டுதோறும் டிசம்பர் அல்லது ஜனவரி மாதங்களில் இந்த பூநாரை பறவைகள் வெளிநாடுகளில் இருந்து வருகின்றன. மார்ச் - ஏப்ரல் மாதங்களில் மீண்டும் திரும்பிச் செல்கின்றன.



### பறவைப் பாதையின் முக்கியப் பகுதி

இந்தச் சரணாலயம், பல்லுயிர் வளம் மிகக் கொண்ட மன்னார் வளைகுடா உயிர்க்கோளக் காப்பகத்தில் 524.78 ஹெக்டேர் பரப்பளவில் அமைந்துள்ளது. இராமேஸ்வரம் தீவின் கடைக்கோடியில் உள்ள சதுப்பு நிலங்களில் அமைந்துள்ள இந்த சரணாலயம், பெரும் பூநாரைகள் உள்ளிட்ட வலசைப் பறவைகள் இடம்பெயர்வதற்கான மத்திய ஆசியப் பறவைப் பாதையின் முக்கியமான பகுதியாக உள்ளது.

> பல்லுயிர் பெருக்கம், காலநிலை மாற்றம் இந்த இரண்டுக்கும் இடையில் வலுவான தொடர்பு உள்ளது. இதை உணர்ந்து அதற்கேற்ப செயல்பட்டு வருகிறது, திராவிட மாடல் அரசு.

இந்தச் சரணாலயம் புலம்பெயர்ந்த ஈர நிலப் பறவைகளுக்கான வலசைப் பாதையிலும் அமைந்துள்ளது. இங்கு நிலப்பரப்பினைச் சார்ந்த 55 வகையான பறவை இனங்களும், நிலப்பரப்பினைச் சாராத புலம்பெயர்ந்த 73 பறவை இனங்களும் உள்ளன.

700 பூநாரைகள், 4,300 அலைந்து திரியும் பறவை இனங்கள் இங்கு வருகை புரிகின்றன என்று அரசின் பறவையியல் கணக்கெடுப்புத் தகவல்கள் சொல்கின்றன. இந்தச் சரணாலயம் அமைக்கப்படுவதன் மூலம் இந்த உயிர்க்கோளக் காப்பகத்தின் பல்லுயிர்ச் சமநிலை பாதுகாக்கப்படுவதுடன், இங்கு வருகை புரியும் பறவை இனங்களின் பாதுகாப்பும் உறுதி செய்யப்படுகிறது.

திராவிட மாடல் அரசு பொறுப்பேற்ற பிறகு அறிவிக்கப்பட்ட மூன்றாவது பறவைகள் சரணாலயம் இது என்பது குறிப்பிடத்தக்கது. இதனையும் சேர்த்து, தமிழ்நாட்டில் தற்போது மொத்தம் 18 பறவைகள் சரணாலயங்கள் உள்ளன.

### அதிகரித்த சூழலியல் பரப்பு

கடந்த நான்கு ஆண்டுகளில் 7 ஆயிரம் ஹெக்டேருக்கும் அதிகமாக 65 வனக் காப்பகங்களை அறிவித்து, சட்டபூர்வ பாதுகாப்பினை அரசு அளித்துள்ளது. அகத்தியமலை யானைகள் காப்பகம், தெற்கு காவிரி வனவிலங்கு காப்பகம், தந்தை பெரியார் வன உயிரினக் காப்பகம், கடவூரில் இந்தியாவின் முதல் தேவாங்கு சரணாலயம் நஞ்சராயன் பறவைகள் காப்பகம், இந்தியாவின் முதல் கடற்பசு காப்பகம் ஆகிய 7 வன உயிரின சரணாலயங்கள் பாதுகாக்கப்பட்ட பகுதி வலையமைப்பின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த அறிவிப்புகள் எல்லாம் ஒவ்வொரு வகையிலும் சாதனையாகும்.

பல்லுயிர் பெருக்கம், காலநிலை மாற்றம் இந்த இரண்டுக்கும் இடையில் வலுவான தொடர்பு உள்ளது. இதை உணர்ந்து அதற்கேற்ப செயல்பட்டு வருகிறது, திராவிட மாடல் அரசு. இதனைத் தொடங்கிவைத்துப் பேசிய முதலமைச்சர், சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்காக அரசு அறிவிக்கின்ற அறிமுகப்படுத்தும் திட்டங்களை உங்கள் சொந்தத் திட்டமாக நினைத்து பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும் என பொதுமக்களைக் கேட்டுக்கொண்டார். அந்தப் பொறுப்புணர்ச்சி, பெரும் பூநாரை சரணாலயம் வழி நிரூபணமாகும்.

...சாதனை தொடரும்

## பேருந்து காத்திருப்பு அனுபவத்தை மாற்றிய கிளாம்பாக்கம்!



சென்னையில் இருந்து தென் மாவட்டங்களுக்கான வெளியூர் பேருந்துப் பயணத்தை எளிதாக்கி இருக்கிறது, கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பேருந்து நிலையம். கோயம்பேடு வெளியூர் பேருந்து நிலையத்தில் நிலவிய போக்குவரத்து நெருக்கடிக்குப் பெரும் தீர்வாகவும் அமைந்தது, கிளாம்பாக்கம் பேருந்து நிலையம். திறக்கப்பட்டபோது, போக்குவரத்து இணைப்பு உள்ளிட்ட சில உள்கட்டமைப்புகள் குறித்து, சிலர் சமூக வலை தளங்களில் விமர்சனங்களை முன் வைத்தனர்.

ஆனால், பண்டிகைக் காலம், தொடர் விடுமுறை காலங்களில் மக்களின் பொதுப் போக்குவரத்தைக் கையாள்வதிலும் பேருந்து நிலையத்தின் உள்கட்டமைப்பு வசதிகள், மக்களால் வியந்து பார்க்கப்பட்டன. அந்த வசதிகளைத் தாண்டி, இந்த ஆண்டு தீபாவளி பண்டிகைக் கால மக்கள் கூட்டத்தைக் கையாள்வதில் பல வசதிகளையும் அரசு செய்துள்ளது. குறிப்பாக, பேருந்துக்காகக் காத்திருக்கும் பயணிகளுக்கு, இசைக் கச்சேரி நிகழ்ச்சி நடத்தப்பட்டுள்ளது.

பேருந்துக்காகக் காத்திருக்கும் அனுபவத்தை மாற்றியதன் மூலம், பயணிகள் இரவு நேர மனச்சோர்வின்றி பயணத்தைத் தொடங்கியுள்ளனர். குழந்தைகள் விளையாடுவதற்கான ஏற்பாடுகள், பாதுகாப்புக்கு விரிவான ஏற்பாடுகள் எனப் புதிய அனுபவத்தைப் பயணிகளுக்கு அளித்துள்ளது அரசு. எதை வைத்து விமர்சனம் செய்யலாம் என காத்திருப்பவர்களுக்குப் பதில் சொல்லும் விதமாக, விமர்சனங்களை எப்படிச் சரிசெய்யலாம் என செயலில் காட்டுகிறது அரசு. அதைப் பண்டிகைக் கால போக்குவரத்து அனுபவத்தில் உணர்கின்றனர், சென்னையில் இருந்து வெளியூர் செல்லும் பயணிகள்.

## ஃப்ளாஷ்பேக்



### தலைவரிடமிருந்து பாசறை சான்றிதழ்!



ஏ.திருவேங்கடம்

2012-ஆம் ஆண்டு, ஒன்றுபட்ட ஈரோடு மாவட்டம், காஞ்சிக்கோயில் பேரூர் பகுதியில் கழக இளைஞர் அணி பாசறைக் கூட்டம் அப்போதைய மாவட்ட கழகச் செயலாளர் அண்ணன் என்.கே.கே.பி.ராஜா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதில் இன்றைய கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கலந்துகொண்டு பாசறையில் பங்கேற்றவர்களுக்கு சான்றிதழ் வழங்கினார். அப்போது, கோபிசெட்டிபாளையம் ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளராக இருந்த நான், தலைவரிடம் சான்றிதழ் பெற்ற தருணம்.

– ஏ.திருவேங்கடம்,
மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்,
ஈரோடு வடக்கு.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## நறுக்கு

### ஒரே நேரத்தில் 2 மாவட்ட மாநாடுகள்!

1966-ஆம் ஆண்டு, அக்டோபர் 15 மற்றும் 16 தேதிகளில், செங்கல்பட்டு மாவட்ட தி.மு.க. 4-வது மாநாடும், நெல்லை மாவட்ட தி.மு.க. 4-வது மாநாடும் ஒரே நேரத்தில் இரண்டு நாட்கள் நடைபெற்றன. இப்படிப்பட்ட நடப்பு, வேறு எந்தக் கட்சி வரலாற்றிலும் நடைபெற்றதில்லை. பேரறிஞர் அண்ணா, என்.வி.நடராசன், பேராசிரியர், மதியழகன் ஆகியோர் ஓர் அணியாகவும், கலைஞர், நாவலர் ஆகியோர் ஓர் அணியாகவும் இரண்டு இடங்களுக்கும் அடுத்தடுத்த நாட்களில் கலந்துகொண்டனர்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No. 1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131